ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்· 438) Mar (1) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

‘ஸ்ரீ அஹோபில தாஸன்‘ க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)...4

3. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)..............................24

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 258)

குரு முத்திரை

பித்ருகண முத்திரை

74-2. ப்ரோத்தாநம் தக்ஷிணம் பாணிம் க்ருத்வாங்குலிகணம் தத:
75. ஸம்லக்நம் குஞ்சயேத் கிஞ்சித் அங்குஷ்டம் ஸம்ப்ரஸார்ய ச
திர்யக் சநை: சநை: கிஞ்சித் குர்யாச்சாதோமுகம் தத:
76. முத்ரா பித்ருகணஸ்யைஷா நித்ய த்ருப்திகரீ ஸ்ம்ருதா
இயம் ச்ராத்தஸஹஸ்த்ரேப்ய: பித்ருப்ரீதிகரீ ஸதா
77-1. தர்சநீயா ப்ரயத்நேந பித்ருணாம் பூஜநே ஸதா

குறிப்பு – இது பித்ருக்களுக்கு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அளிக்கும் முத்திரை ஆகும். இது ஆயிரம் ச்ரார்த்தங்களைக் காட்டிலும் அதிகமான மகிழ்ச்சியை அளிப்பதாகும். பித்ருக்களை வணங்கும்போது இதனைக் கவனமாகக் காண்பிக்கவேண்டும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 403)

6-2-4 ஆலின் நீள் இலை ஏழ் உலகும் உண்டு அன்று நீ கிடந்தாய் உன் மாயங்கள்
மேலை வானவரும் அறியார் இனி எம் பரமே
வேலின் நேர் தடம் கண்ணினார் விளையாடு சூழலைச் சூழவே நின்று
காலி மேய்க்க வல்லாய் எம்மை நீ கழறேலே

பொருள் - அனைத்து லோகங்களையும் சிறிய திருவயிற்றில் அடக்கும்படியாக உட்கொண்டு, “இந்த ஆலமரமானது இந்த இடத்தில் முளைத்தது” என்று அறியாதபடி உள்ள ஓர் ஆலின் நீளமான இலையில், அனைத்து லோகத்தையும் ப்ரளயம் உட்கொண்ட அன்று, “ப்ரளயத்தில் விழுந்துவிடுவோம்” என்று அறியாதபடியான சிறிய குழந்தையாக நீ கிடந்தாய் அல்லவோ? இப்படிப்பட்ட உன்னுடைய வியக்கவைக்கும் செயல்களை, ஸம்ஸாரத்தின் வாசனை சிறிதும் இல்லாதபடி உள்ள நித்யஸூரிகளும் கூட அறியமாட்டனர். இவ்விதம் உள்ளபோது இதனை நாங்கள் சொற்கள் கொண்டு உரைப்பது இயலுமோ? வேல் போன்று ஆளை அழிக்கவல்ல பெரிய கண்கள் கொண்ட பெண்கள் விளையாடும் மணற்வீடுகளைச் சுற்றி நின்று, பசுக்களுடைய வயிறு நிரம்பும்படியாக மேய்க்கவல்லவனே! இப்படியாக உனது கள்ளத்தனமான செயல் குறித்து அறிந்த எங்களை நோக்கி, “மாடுகள் மேய்க்கப்போன என்னை, களவு உரைத்தேன் என்று ஏன் கூறுகிறீர்கள் ?”, என்று கேட்க வேண்டாம்.

அவதாரிகை – "நான் சொன்னவை எல்லாம் இவர்கள் அந்யதாவாக புத்தி பண்ணுகிறது, நம்மையொழியச் செல்லாமை பிறந்து நாம் அரைக்ஷணம் தாழ்த்தது பொறுக்கமாட்டாமை இறே" என்று பார்த்து, "நீங்களென்னை இங்ஙனே சொல்லலாமோ? நான் பித்ராதிகளுக்குப் பரதந்த்ரனன்றே? அவர்கள் என் கையிலே கோலைத் தந்து 'நீ போய்ப் பசு மேய்த்து வா' என்றல், என்னால் மாட்டேனென்னப் போமோ?" என்றான்; பித்ராதிகளுக்குப் பரதந்த்ரராய்க் கொண்டு மேய்ப்பார் மேய்க்கும்படியிதுவோ? நீ செய்யுஞ் செயல் சேர்ந்திருக்கிலிறே, நீ சொல்லுஞ் சொலவும் சேர்ந்திருப்பது.

விளக்கம் – "நம்மைத் தவிர சிந்தனை ஏதும் பிறக்காமல் உள்ளதால், நாம் அரை க்ஷணம் காலதாமதம் செய்தமையும் கூட இவர்களுக்கு பொறுக்க இயலவில்லை. இதனால் அல்லவோ, நாம் கூறும் பல சொற்களுக்கு பல்வேறு அர்த்தம் கற்பித்துக் கொள்கிறார்கள்", என்று எண்ணினான். அவர்களிடம் இவன், "நீங்கள் என்னை இப்படிக் கூறலாமோ? நான் எனது தந்தை முதலானவர்களுக்குக் கட்டுப்பட்டவன் அல்லவோ? அவர்கள் என்னிடம் ஒரு கோலைத் தந்து, 'நீ சென்று பசுக்களை மேய்த்து வா' என்று கூறினால், என்னால் மாட்டேன் என்று உரைக்க இயலுமா?", என்றான். இதற்கு இவர்கள், "தந்தை போன்றவர்களுக்குக் கட்டுப்பட்டு நின்று , அவர்கள் கூறுவதற்கு ஏற்ப பசு மேய்க்கும் விதம் இதுவோ? நீ செய்யும் செயலாகிய ஆலின் இலை மீது கிடத்தல் போன்றவை 'மற்றவர்களுக்கு நீ கட்டுப்பட்டவன்' என்பதை உணர்த்தினால் அலல்வோ, உன்னுடைய சொற்களும் உனது செயலுடன் சேர்ந்திருக்கும்?", என்றனர்.

வ்யாக்யானம் - (ஆலினீளிலையேழுலகுமுண்டு அன்று நீ கிடந்தாய்) ஓராலிலையாவது, அதுதான் முமிழ் விரியாத அளவாயிருப்பது; அதிலே, ஏழுலகங்களையும் வயிற்றிலே வைத்து, ஒரு யசோதாதிகளுங் கூட உதவாத தசையிலே கண்வளர்ந்தருளினாய். ஜகத்தையடங்கலும் வயிற்றிலே வைத்து, சிறு வடிவைக் கொண்டு ப்ரளயத்திலே தனியே கிடக்கவல்லவனன்றோ நீ! அஸங்கதங்களை ஸங்கதமாகச் செய்யவல்ல ஸாமர்த்யமுடைய உனக்கு இவை எல்லாம் சேரச் சொல்லுகை பொருளோ? நீ சொல்லுகிறவை ப்ரணயிகள் கோஷ்டியில் பரிமாறுவதல்ல காண்; "பிதாநாமமூர்த்தச் சிரோரோக:" என்றும், "குரவ: கிம் கரிஷ்யந்தி" என்றுங்காண் இங்குப் பரிமாறுமவை. "அன்னையென்

செய்யிலென்? ஊர் என் சொல்லிலென்?" என்றிறே இங்கிருப்பது. "தக்தாநாம் விரஹாக்நிநா" இதுக்கு நீர் சொரிய வல்லவர்களோ அவர்கள்? அவர்களை மறைத்து வந்து கிட்டக் கடவ எங்களுக்கு இவை வார்த்தையல்ல காண்!

விளக்கம் – (ஆலின் நீள் இலை ஏழுலகும் உண்டு அன்று நீ கிடந்தாய்) – "நீள் இலை" என்றால் "முகிழ் விரியாத சிற்றிலை" என்று பொருள். அந்த இலை மீது ஏழு உலகங்களையும் திருவயிற்றில் வைத்து, யசோதை போன்றவர்களாலும் கூட உதவ இயலாத நிலையில் திருக்கண்கள் வளர்ந்தாய். இந்த ஜகத் முழுவதையும் திருவயிற்றில் வைத்து, சிறியதாக ஒரு வடிவம் எடுத்து, ப்ரளயத்தில் தனி ஒருவனாகக் கிடக்கவல்லவன் அல்லவோ நீ? பொருத்தம் இல்லாதவற்றையும் பொருந்தும்படியாகச் செய்யவல்ல ஸாமர்த்யம் கொண்ட உனக்கு, இது போன்ற பலவற்றையும் சேர்த்து உரைத்தல் பொருந்துமோ? நீ கூறும் சொற்களான, 'நான் எனது தந்தை போன்றவர்களுக்குக் கட்டுப்பட்டவன்' என்பது போன்றவை, காதலிகளிடம் கூறத்தக்கவை அல்ல அல்லவோ? சரி, காதலிகள் விஷயத்தில் உரைக்கத்தக்கவை எவை என்பதை அடுத்து கூறுகிறார்; "பிதாநாமமூர்த்தச் சிரோரோக: - தந்தை என்று கூறுவான்" என்றும், ஸ்ரீவிபு. (5-18-22) - குரவ: கிம் கரிஷ்யந்தி – நம்மைப் பெரியவர்கள் என்ன செய்வர்? - என்றும் அல்லவோ இங்கு கூற வேண்டிய சொற்கள்? மேலும், திருவாய்மொழி (5-3-6) – அன்னை என் செய்யில் என்? ஊர் என் சொல்லில் என் - என்று அல்லவோ இங்கு இருக்கவேண்டும்? ஆனால் தாய்தந்தையர்களை இவ்விதம் அலட்சியம் செய்யலாமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; "தக்தாநாம் விரஹாக்நிநா – விரகம் என்ற தீயால் எரிக்கப்பட்ட" என்பதாக உள்ள நிலைக்கு ஏற்ப நீர் சொரியக் கூடியவர்களோ அவர்கள்? அவர்களை மறைத்து, அவர்கள் அறியாமல் எங்களைக் காண வரும்போது கூறத்தக்க சொற்களோ இவை?

வ்யாக்யானம் - "நான் அரைக்ஷணம் தாழ்க்க, கோபத்தாலே 'அஸத்யன்' என்றிகோள்; எல்லாரும் அறியாரோ என் அஸத்யம்" என்ன; (உன் மாயங்கள் மேலை வானவரும் அறியார்) உன்னுடைய க்ருத்ரிமங்கள், ஆக்கனான இந்த்ராதிகள் அன்றிக்கே நித்யஸூரிகளும் அறியார்கள். "ப்ரஹ்மாபி ந வேத நாராயணம் ப்ரபும்" என்கிறபடியே அறியாமைக்கு அவர்களும் ஒத்திருக்கச்

செய்தே, உகந்தாரைக் காற்கடை கொள்ளுகிற ப்ரகரணமாகையாலே நித்யஸூரிகளை நிதர்சநமாகச் சொல்லுகிறது; “சூட்டு நன் மாலைகள் தூயனவேந்தி” என்றுகொண்டு அவர்கள் ஸமாராதநத்துக்கு வேண்டுவன “ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ண”ப் போந்ததிறே; அது தன்னையும் விட்டிறே கொண்டு நிற்க, அடலாயர் தங்கொம்பினுக்குக் கோட்டிடையாடிற்று. பழையாரை யெல்லாம் காற்கடைக் கொள்ளுகிற ப்ரகரணமாயிற்றிறே. நவப்ரியைகளை விரும்புவாரைப் போலேகாணும்.

விளக்கம் – இவை அனைத்தையும் கேட்ட இவன், “நான் அரை க்ஷணம் காலதாமதம் செய்து வந்த கோபத்தால், என்னை அஸத்யன் என்று கூறுகிறீர்களே! நீங்கள் கூறுவதைக் கேட்கும் அனைவரும் என்னை அஸத்யன் என்றே அறிவார்கள் அல்லவோ?”, என்றான். இதற்கு இவர்கள் விடை அளிக்கிறார்கள். (உன் மாயங்கள் மேலை வானவரும் அறியார்) - உனது வஞ்சனை நிறைந்த செயல்களை, உன்னால் உண்டாக்கப்பட்ட இந்திரன் போன்றவர்கள் மட்டுமே அறிவர் அல்லாமல், நித்யஸூரிகள் அறியமாட்டனர். நித்யஸூரிகளை மட்டும் “மேலை வானவர்கள்” என்று ஏன் சிறப்பித்துக் கூறவேண்டும்? நான்முகன் போன்றவர்கள் அறியாரோ என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; “ப்ரஹ்மாபி ந வேத நாராயணம் ப்ரபும் - ஸ்ரீமந்நாராயணனை நான்முகனும் அறிவான்” என்பது காண்க. ஆக இவனைக் குறித்த அறியாமை என்பது அவர்களுக்கும் ஒத்திருக்கும்போது, தன்னை விரும்புபவர்களை அலட்சியம் செய்வது குறித்துக் கூறும் இடம் என்பதால், நித்யஸூரிகளை மட்டுமே உதாரணமாகக் காண்பிக்கிறார்கள். நித்யஸூரிகளை அவ்விதம் செய்தானோ என்பதற்கு விடை அளிக்கிறார்; திருவிருத்தம் (21) – சூட்டு நன் மாலைகள் தூயனவேந்தி - என்பதாக அவர்கள் இவனை ஆராதனை செய்வதற்காக அனைத்து பொருள்களையும் கொண்டு வந்து நிற்கும்போது, இவன் திருவிருத்தம் (21) - ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ண - என்பதாகக் களவு செய்த வெண்ணெயை உண்ணச் சென்றான் அல்லவோ? அவர்களுடைய ஆராதனை போன்றவைகளையும் விட்டு அல்லவோ, திருவிருத்தம் (21) - அடலாயர் தங்கொம்பினுக்கு - என்பதாக இருந்தான்? தன்னுடன் ஊடல் கொள்பவர்களை அலட்சியம் செய்யும் இடம் அல்லவோ இது? புதியதாக உள்ள மின்னிடை மடவார்களை அல்லவோ விரும்பும் இடமாக உள்ளது?

வ்யாக்யானம் - (இனி எம்பரமே) நித்யஸூரிகளோடு ஒக்கத் தங்களையும் ஸமாநாதிகரிக்கிறார்கள். அவர்களுக்கு நிலமல்லாதது எங்களால் அளவிடப்போமோ? அவையெல்லாம் எங்களையொழியச் சொல்லாய். "என்தான்? நான் பசு மேய்த்ததமை இல்லையென்கிறிகோளோ? அறிந்திலோமென் கிறிகோளோ? நான் சொன்னது பொய் என்கிறிகோளோ?" என்றான்; அவையெல்லாம் அப்படியேயானாலும் நீதான் பசு மேய்க்கும்படி இப்படியேயோ? (வேலினேர் தடங்கண்ணினார் விளையாடு சூழலைச் சூழவே நின்று காலி மேய்க்க வல்லாய்) பெண்களுடைய கண்களிலே துவக்குப்பட்டு அவ்வருகு போகமாட்டாதே நின்றுபோலே காணும் பசு மேய்ப்பது! போக்தாக்கள் அளவல்லாதபடி பரப்பையுடைத்தாய், ஓராளுமொரு நோக்கும் நேரான கண்ணை உடையராயிருக்கை. "கார்த்தண் கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறு படுத்தென்னை, ஈர்த்துக் கொண்டு விளையாடும் ஈசன் தன்னைக் கண்டீரே" என்று, தன் கண்ணழகைக் கண்ட பெண்கள் படும் பாடெல்லாம் இவன் தன்னை அவர்கள் படுத்த வல்லவர்கள்.

விளக்கம் – (இனி எம்பரமே) – "நித்யஸூரிகளை வஞ்சித்தது போன்று எங்களையும் வஞ்சித்தாய்" என்பதைக் கூறுவதாக வைத்துக் கொண்டு, அதன் மூலம் நித்யஸூரிகளுடன் தங்களை ஒன்றுபடுத்தி உரைக்கிறார்கள். அவர்களால் அளவிட இயலாதவை எங்களால் அளவிட இயலுமோ? உனது மாயங்கள் அனைத்தையும் எங்களைத் தவிர மற்ற அனைவரும் அறியும்படியாகக் கூறவேண்டாம்; இங்கு மாயங்கள் என்பது "தாய் தந்தையர்க்குக் கட்டுபட்டவன்" என்பது போன்ற சொற்களாகும். இதனைக் கேட்ட இவன், "ஏன்? நான் பசுக்களை மேய்க்கவில்லை என்று கூறுகிறீர்களா? அல்லது பசுக்களை மேய்ப்பதை நான் அறியவில்லை என்கிறீர்களா? நான் கூறியவை பொய் என்கிறீர்களா?", என்றான். இதற்கு இவர்கள், "அவை எல்லாம் உண்மை என்றே வைத்துக்கொள்வோம். நீ பசுக்களை மேய்க்கும் விதம் இதுவோ?", என்றனர். (வேலினேர் தடங்கண்ணினார் விளையாடு சூழலைச் சூழவே நின்று காலி மேய்க்க வல்லாய்) - வேல் போன்ற கண்கள் கொண்ட பெண்களுடைய கண்ணழகில் ஈடுபட்டு, அங்கிருந்து அகன்று செல்ல இயலாமல், அங்கேயே நின்றபடி அல்லவோ நீ பசுக்களை மேய்க்கிறாய்? உன்னால் அனுபவிக்கப்படுபவர்கள் எல்லையற்று இங்கு உள்ளனர்; "ஒரு ஆள்

ஒரு கண்” என்பதாக நோக்கியபடி உள்ள பார்வை கொண்டவன். நாச்சியார் திருமொழி (14-4) – கார்த்தண் கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறு படுத்தென்னை, ஈர்த்துக் கொண்டு விளையாடும் ஈசன் தன்னைக் கண்டீரே - மேகத்தில், காண்பவர்கள் களைப்பைப் போக்கும்விதமாக, தாமரை மலர்ந்தது போன்றுள்ள திருக்கண்கள் என்ற பாசக்கயிற்றில் என்னைக் கட்டி அகப்படுத்தி, எனது செயல்களானவை எனக்கு வசப்பட்டவை என்று அல்லாமல் செய்து, என்னைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டு, இதனையே விளையாட்டாகக் கொள்ளும் ஈசனை யாரேனும் கண்டீர்களா - என்பதற்கு ஏற்ப, தனது கண்ணழகைக் கண்ட பெண்கள் அடையும் பாடுகள் அனைத்தையும் இவன் அடையும்படியாகச் செய்யவல்லவர்களாக இவர்கள் உள்ளனர்.

வ்யாக்யானம் – (விளையாடு சூழலைச் சூழவே நின்று காலி மேய்க்க வல்லாய்) “உன் வயிறும் நிறைத்துப் பசுக்களின் வயிறும் நிறைத்தல்லது வாராதேகொள்” என்றன்றோ பித்ராதிகள் உன்னைச் சொல்லிவிட்டது? “இன்னவிடத்தே நின்று பசு மேய்” என்றொரு ப்ரதேச நியமம் பண்ணி விட்டார்களோ? அவர்கள் நியமித்ததொழியச் செய்யப் பார்த்தால் அது இங்குச் செய்யலாகாதோ? கண்ணுக்கிட ஒரு துரும்பும் இன்றியே, அவர்கள் விளையாடுகிற மணற்குன்றுகளைச் சூழ நின்று மேய்க்கவேணும் போலே காணும். பசுக்கள் மேய்க்கைக்கு ஸம்பாவனை இல்லாத இடங்களிலே இவற்றின் வயிறுகளை நிறைத்துக் கொடுபோகையினாலே, கீழில் அகடிதகடநா ஸாமர்த்யம்போலே இதுவுமோர் ஆச்சர்யஞ் சொல்லுகிறதாகவுமாம்.

விளக்கம் - (விளையாடு சூழலைச் சூழவே நின்று காலி மேய்க்க வல்லாய்) - “வேலினோர்” என்றுள்ள வாக்கியத்திற்கு இரண்டு கருத்துக்கள் உள்ளன; அவர்கள், “நீ பசுவை மேய்ப்பது இப்படியா?”, என்பதற்கு இரண்டு கருத்துக்கள் உள்ளன. இவற்றில் முதல் கருத்தைக் கூறுகிறார். தாய்தந்தையர் பசுவை மேய்த்து வா என்று கூறுவதை நிறைவேற்ற, யாரேனும் மணற்குன்றில் வந்து பசுக்களை மேய்ப்பாரோ என்று கூறுவதாக கருத்து; இவர்கள் இவனிடம், “உனது வயிறும் நிறைந்து, பசுக்களின் வயிறும் நிறைந்தால் அல்லாமல் மீண்டும் இங்கு வராமல் இருப்பாயாக என்று அல்லவோ உனது தாய் தந்தையர் உன்னிடம் கூறினார்கள்? இந்த இடத்திற்குச் சென்று பசுக்கலை மேய்ப்பாயாக என்று இடத்தையும் தீர்மானித்து அனுப்பினார்களோ? அவர்கள் கூறியதைத் தவிர உள்ளவற்றையும் செய்ய

முனைந்தால் அதனை இங்கு செய்தாலாகாதோ? கண்களுக்கு எட்டிய தூரம் முடிய ஒரு புல்லும் இல்லாத இடத்தில், மணற்குன்று கட்டி விளையாடும் இடங்களில் பசுக்களை சூழும்படிச் செய்து மேய்க்கவேண்டும் என்று உள்ளான். இதனைக் காண்பீர்களாக", என்றனர். அடுத்து "வேலினேர்" என்பதற்கு இரண்டாவது கருத்து அருளிச்செய்கிறார். பசுக்களை மேய்ப்பதற்குச் சம்பந்தம் இல்லாத இடங்களில் கூட இவற்றை மேய்த்து, இவற்றின் வயிறுகளை நிரம்பும்படிச் செய்வதான இந்தச் செயலானது, மணற்குன்றுகளில் பசுக்களை மேய்த்தது போன்று, யாராலும் செய்ய இயலாத செயலையும் கூடச் செய்யவல்ல திறனை உணர்த்துவதாக உள்ளது என்று வியப்பைக் கூறுவதாகவும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - (வல்லாய்) "உன்னை யாரேனும் நியமித்தாலும் நீ நினைத்தது செய்து தலைக்கட்டவல்லான் ஒருத்தனன்றோ!" என்கிறாள். இவர்கள் சொன்ன மர்மம் புத்தி பண்ணாதே, "நம்முடைய ஸாமர்த்யந் தோற்றச் சொல்லாநின்றார்கள்" என்று, தன் மேன்மை தோற்றச் சில சொல்லப் புக்கான்; "இவன் அழியும்படி நெடும்போது சில வார்த்தை சொன்னோம்; இன்னும் சில சொல்லுவானுக்கு" என்று இருந்தாள். (இதீவ) கீழே நெடும்போது சில பாசுரமிட்டுச் சொல்லிக் கொடுபோந்தான்; ப்ரணயதாரையில் ஓடுமது குஷிகளாயிருப்பார்க்கு நிலமன்றே; "இப்புடைகளிலே" என்கிறான். (தேவீ) வல்லபைகளுடைய பரிமாற்றம் கடக்க நிற்பார்க்குத் தெரியாதிறே. (வசநம் மஹார்த்தம்) கடக்க நிற்பார்க்கேயன்று; தேசிகரானவர்கள் தங்களுக்கும் தெரியாதபடியாயிருக்கை. (தம் வாநரேந்த்ரம்) இவனோடு ஒக்கக்கடவார் ஒருத்தருமில்லை, சேஷத்வத்துக்கு முடிசூட்டினார் மஹாராஜரேயாகிலும், பாரதந்த்ர்யத்தின் எல்லையிலே நின்றான் இவனென்கை. இவ்வளவிலே இவள் முகம் பார்த்து வார்த்தை சொல்லப் பெற்றிலரிறே அவர். (மதுரார்த்தம்) அபூமியென்னாக் கைவாங்க வொண்ணாதபடியா யிருக்கை. (உக்த்வா) அவனும் அவனுடையவர்களும் வாழும்படி வார்த்தை சொன்னாள். (ச்ரோதும் புநஸ்தஸ்ய வசோபி ராமம்) "அழிந்தாரையாக்கவல்லன்" என்னுமிடங் கண்டாள்; தானழிச்ச தலை உண்டாம்படி வார்த்தை சொல்லவல்லமை கேட்க வேணுமென்றிருந்தாள். (ராமார்த்த யுக்தம்) ராம ப்ரயோஜந யுக்தம்; தன் கார்யம் செய்து தலைக்கட்ட வல்லானொருத்தன். (விரராம) நெடும்போதுதான் வார்த்தை சொல்லுகை யினாலும், ஸ்வாமி வார்த்தை சொல்லும்போது மேலிட்டு வார்த்தை சொல்ல வொண்ணாமையினாலும் பேசாதேயிருந்து அவனுக்கு அவகாச ப்ரதாநம்

பண்ணினாள். (ராமா) இவ்விட்டு நீட்டுகையொழிய வார்த்தை சொல்லாதே இருக்கிறபோதை அழகை அவர்தாம் காணப்பெற்றிலோம். இவனும் அடர்த்து வார்த்தை சொன்னான்.

விளக்கம் – (வல்லாய்) இவர்கள் இவனிடம், "உன்னிடம் யாரேனும் எந்தச் செயலைக் கொடுத்து, அதனை முடிக்கவேண்டும் என்று உன்னை நியமித்தாலும், நீ எண்ணுவது போன்று கார்யம் செய்து, அவற்றையும் முடிக்கவல்லவன் நீ மட்டுமே அல்லவோ?", என்றனர். "இவர்கள் நம்முடைய சாமர்த்யம் வெளிப்படும்படியாகக் கூறுகிறார்கள்" என்று எண்ணியவனாக, தனது மேன்மை வெளிப்படும்படி மேலும் சிலவற்றை உரைக்க முனைந்தான். அவற்றைக் கேட்ட இவர்கள், "இவன் அழியும்படியாகவே நாம் சில சொற்களைக் கூறினோம். இவனும் மேலும் சில சொற்களைக் கூறியபடி உள்ளான்", என்று பேசிக் கொண்டனர். இதற்கு உதாரணம் காண்பிக்கும்விதமாக ஸுந்தரகாண்டம் (36-31) - இதி இவ தேவீ வசநம் மஹார்தம் தம் வாநரேந்த்ரம் மதுரார்தம் உக்த்வா | ச்ரோதும் புந: தஸ்ய வச: அபிராமம் ராமார்தயுக்தம் விரராம ராமா - இப்படியாக, அந்தத் தேவியானவள் வானரர்களில் உயர்ந்த ஹனுமானை நோக்கி, ஆழ்ந்த பொருள் அடங்கிய மதுரமான சொற்களைப் பேசினாள். தொடர்ந்து, இராமனுடைய செயல்களைக் கொண்டதான ஹனுமானுடைய இனிமையான சொற்களை மீண்டும் கேட்பதற்காக மௌனமாக இருந்தாள் – என்ற ச்லோகத்தை வ்யாக்யானம் செய்கிறார். (இதீவ) - இதுவரை பலவிதமான சொற்களை உரைத்தபடி இருந்தான். இவை அனைத்தும் ப்ரணயத்தை தாரை போன்று பெருக்கியபடி உள்ளவைகள் என்பதால், ரிஷிகளாக உள்ளவர்களுக்கு அறிவதற்கு இயலாததாகும் அல்லவோ? (தேவீ) - காதலிகள் கூறும் சொற்கள் மற்றும் காண்பிக்கும் அடையாளங்கள், அந்தக் காதலை விட்டு விலகி நிற்பவர்களால் அறிய இயலாது அல்லவோ? அதாவது இவன் கூறிய சொற்கள், காதலியைப் பிரிந்து தவித்தபடி உள்ளவர்களுக்கு மட்டுமே புரியும் அல்லாமல், இவன் போன்று கடந்து உள்ளே வந்தவனுக்கு அறிய இயலாது. (வசநம் மஹார்த்தம்) - இவளுடைய இந்தச் சொற்கள் அனைத்தும் பிரிந்து சென்று நிற்பவர்களுக்கு அல்ல. இராமனைக் குறித்து இராமனும் அறியமாட்டான் அல்லவோ? (தம் வாநரேந்த்ரம்) - இவனைப் போன்று இராமனை அறிந்தவர்கள் யாரும் இல்லை. சுக்ரீவனும் அறியமாட்டானா என்றால், அடிமைத்தனத்தின் சக்ரவர்த்தியாக சுக்ரீவன் உள்ளபோதிலும், அனுமன்

மட்டுமே "இராமனுக்கு அல்லாமல் யாருக்கும் வசப்பட்டவன் அல்லன்" என்று இருந்தான். மேலும் அனுமனை நோக்கி சீதை உரைத்த பல சொற்களை சுக்ரீவன் கேட்டதில்லை. (மதுரார்த்தம்) - இவள் கூறும் சொற்கள் ப்ரணயத்தில் ஈடுபடாத நமக்கு விளங்காது என்று விலக இயலாதபடி உள்ள நிலையில் அனுமன் இருந்தான். (உக்த்வா) – அனுமன் மற்றும் அனுமனைச் சேர்ந்து நிற்கும் இராமன் சுக்ரீவன் போன்றவர்களும் உயிர் தரித்து நிற்கும்படியான சொற்களைக் கூறினாள். (ச்ரோதும் புநஸ்தஸ்ய வசோபி ராமம்) - தான் இராமனை ப்ரணய கோபம் கொண்டு சில சொற்கள் கூறி அழித்த பின்னர், அனுமன் தனக்குச் சமாதானம் கூறுவான் என்று இவள் எப்படி அறிந்தாள்? தனது தலைப்பின்னல் கொண்டு தான் தற்கொலை செய்து கொள்ள முயன்ற நேரத்தில் தன்னைக் காப்பாற்றியவன் என்பதால், "அழிந்தாரை மீண்டும் ஆக்க வல்லவன்" என்று தீர்மானித்தாள். "தன்னிடம் எந்தத் தயையும் காண்பிக்காதவனும், தனது செயலில் மட்டுமே நோக்கம் கொண்டவனும் ஆகிய இராமன்" என்று அவனை அழித்த இவள், இராமன் எந்தத் தோஷமும் அற்றவன் என்பதான சொற்களை அனுமன் கூறவேண்டும் என்றும், அதனை தான் கேட்க வேண்டும் என்றும் இருந்தாள். (ராமார்த்த யுக்தம்) - இராமன் என்ற பயன் கிடைக்கும்படியாக உள்ள சொற்களைக் கூறுதல். தனது எஜமானன் விஷயத்தில் மற்றவர்களை சமாதானம் செய்யவேண்டிய கார்யம் தொண்டனுக்கு உள்ளது; இப்படிப்பட்ட ஒருவனாகிய அனுமன், (விரராமா) - நீண்ட நேரம் சீதையாகிய தான் பேசியபடி இருந்த காரணத்தாலும், தனது ஸ்வாமியாகிய இராமனுடைய சொற்கள் தன்னால் கூறப்பட்டபடி இருந்ததால், நடுவில் தடை ஏற்படும்படியாக ஏதும் கூறாமல் அனுமன் இருந்த காரணத்தாலும், இதுவரை ஏதும் கூறாமல் நின்ற அனுமனுக்கு, பேசும் வாய்ப்பை அளித்தாள். (ராமா) – சீதை, இராமனால் கூறப்பட்ட சொற்களை அழகாகக் கூறுவதை அனுமனால் மட்டுமே கேட்க முடிந்தது; ஆகவே அனுமன் தனது மனதி, "இந்தச் சொற்களை இவள் கூறும் அழகை இராமன் காணப்பெறவில்லையே", என்று எண்ணினான். தொடர்ந்து சில சொர்களைக் கூறினான்.

வ்யாக்யானம் - (எம்மை நீ கழறேலே) வாராய்! நோவுபடுத்தி நலிந்தார் முடிக்கவும் தேடுவர்களோ? (எம்மை) உன்னைப் பிரிந்து ஆற்றாமை நோவுபடுகிற எம்மை. (நீ) ஒருகாலமும் பிரியாத நீ. பிரிவால் வரும் நோவு இன்றிக்கே இருக்கிற நீ.

(கழறேலே) விசாய்ந்து வார்த்தை சொல்லாதேகொள்; நீ இங்ஙன் மேலிட்டு வார்த்தை சொல்லப்பெறாய் காண். நீயும் நாங்களுமானால் எங்களை நீயடர்த்து வார்த்தை சொல்ல என்ன ப்ராப்தியுண்டு? சேதநரைப் போலே வந்து வார்த்தை சொல்லுவதே! அதிலே வைத்து மிகைத்து வார்த்தை சொல்லுவதே. ஆற்றாமைக்கு உதவினார்க்கன்றோ வாயுள்ளது!

விளக்கம் – (எம்மை நீ கழறேலே) - துன்பத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் துன்பம் அடைந்தவர்கள் முடியும்படி உள்ளபோது, அவர்களை நோவுபடுத்தியவர்கள் தேடுவார்களோ? (எம்மை) – உன்னைப் பிரிந்த பிரிவாற்றாமையால் வருந்தும் எங்களை. (நீ) - ஒருபோதும் பிரியாமல் உள்ள நீ. பிரிவு காரணமாக ஏற்படும் துன்பம் இல்லாத நீ. (கழறேலே) - இதற்கு மேலும் எந்தச் சொற்களையும் கூறவேண்டாம். இதற்கு அவன், “நான் ஏன் மேலே ஏதும் கூறக்கூடாது?”, என்றான். இதற்கு இவர்கள், “எங்கள் விஷயத்தில் குற்றம் இழைத்த காரணத்தால், உனக்குத் தகுதி இல்லை” என்றார்கள். இவ்விதம் குற்றம் உள்ள நீயும், துன்பம் அடைந்த நாங்களும் இங்கு உள்ளபோது, எங்களை நெருங்கி, சில சொற்களை எங்களிடம் கூறுவதற்கு, உனக்கும் எங்களுக்கும் என்ன ஸம்பந்தம் உள்ளது? நாங்கள் உயிருடன் உள்ளதாக எண்ணி வந்து சில சொற்களை நீ கூறுகிறாயே! இவை சற்று மிகையாகவே உள்ளது. துன்பம் ஏற்படும்போது வந்து உதவுபவர்களுக்கு அல்லவோ சொற்கள் கூறும் தகுதி உள்ளது?

6-2-5. கழறேல் நம்பீ! உன் கைதவம் மண்ணும் விண்ணும்
நன்கு அறியும் திண் சக்கர
நிழறு தொல் படையாய் உனக்கு ஒன்று உணர்த்துவன் நான்
மழறு தேன் மொழியார்கள் நின் அருள் சூடுவார் மனம் வாடி நிற்க எம்
குழறு பூவையொடும் கிளியோடும் குழகேலே

பொருள் – “பொய் நம்பீ” என்று கூறலாம்படி பொய்களால் நிறைந்துள்ள நீ, “என்னைப் பொய்யன் என்று ஏன் கூறுகிறீர்கள்” என்று மேன்மேலும் கூறவேண்டாம். சூரியனை மறைத்து, பகலை இரவாக்கும் பொய்க்குத் துணையாக நிற்கும் வலிமையுடைய சக்கரத்தாழ்வான் என்னும் ப்ரகாசம் கொண்ட, உனக்கு மட்டுமே உரிய, ஆயுதம் கொண்டவனே! உன்னுடைய வஞ்சனை நிறைந்த செயல்களை, மஹாபாரத யுத்தத்தில் அந்தப் பூமியில் திரண்டு

நின்ற அனைத்து அரசர்களும், விண்ணில் உள்ள தேவர்களும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி நன்கு அறிவர். இவ்விதம் உள்ளபோது உனக்கு நான் ஒன்று கூறுகிறேன், கேட்பாயாக. எங்கள் வார்த்தைகளில் உள்ள இனிமையை நீ கொண்டாடவேண்டாம்; காரணம், நாங்கள் உன்னால் விரும்பப்படும் அந்த மற்ற பெண்கள் அல்லர். உன்னுடைய க்ருபையை ஏற்பதற்காகவே பிறந்தவர்களாக, இளந்தேன் போன்ற சொற்களைக் கொண்ட அவர்களுடைய மனமானது அழகு இழந்து வாடி நிற்கிறது. நீ செய்வது என்ன? அவர்களுடையது அல்லாமல், எங்களுடையதாக உள்ளதும், அவர்கள் போன்று உன்னிடம் தெளிந்த சொற்களைக் கூற இயலாமல் குழறுதல் கொண்ட சொற்கள் நிறைந்த பூவை மற்றும் கிளி ஆகியவற்றுடன் நீ சேர்ந்து விளையாட வேண்டாம்.

அவதாரிகை – "ஸ்நேஹிகளாயிருப்பார்க்குக் குற்றத்தைக் குணமாகக் கொள்ளவுமாம்; நிஸ்ஸ்நேஹிகளுக்கு குணந்தன்னையே குற்றமாகக் கொள்ளவுமாம்; விஷயாநு குணமாயிறே குணதோஷங்களிருப்பது; ஆகையாலே, நான் சொன்னவை எல்லாம் இப்போது இத்தலைக்குக் குறையாய்த் தோற்றுமிறே; ஆனாலும் மத்யஸ்தர் சொன்னதிறே அர்த்தமாய்த் தலைக்கட்டுவது" என்றான்.

விளக்கம் - இவர்கள் இவனிடம், "உனது வஞ்சனை நிறைந்த செயல்களை மண்ணும் விண்ணும் நன்றாக அறியும்", என்றனர். இதற்கு இவன், "இவ்விதம் பொதுவாகக் கூறலாகாது. நமக்கு மத்யஸ்தம் செய்ய ஒருவர் வேண்டும்", என்றான். உடனே இவர்கள், "இதற்கு மத்யஸ்தம் செய்ய ஒருவர் வேண்டுமா? அன்புள்ள நாங்கள் கூறினால் போதுமானதாக ஆகாதா?" என்று கூறுவார்கள் என எண்ணினான். ஆகவே இவன், "நீங்கள் கூறுவதை எனக்கு நம்ப இயலவில்லை" என்பதை வெளிப்படுத்தும்விதமாக பல காரணங்களை, பலவிதமான சொற்களால் கூறினான். இவ்விதமாக உள்ளதால் மத்யஸ்தர் கூறுவதையே ஏற்க வேண்டும் என்கிறான். இவன் இவர்களிடம், "அன்பு நிறைந்தவர்கள், குற்றத்தையும் கூட குணமாகவே ஏற்பர். அன்பு இல்லதவர்கள், குணங்களையும் கூட குற்றம் என்றே காண்பர். விஷயங்களுக்கு ஏற்றபடி அல்லவோ குணமும் தோஷமும் உள்ளன. உலகில் பொதுவான வழக்கம் இப்படியே என்பதால், நான் கூறிய பலவும் உங்களுக்கு, பொருத்தம் இல்லாதபடி உரைத்ததாகவும், பொய்யை மெய்யாகக்

கூறினேன் என்பதாகவும் தோன்றும். நீங்கள் கூறும் சொற்கள் நம்பத்தக்கதாக இருந்தாலும், ஒரு மத்யஸ்தர் கூறுவதையே என்னால் ஏற்க இயலும்", என்றான்.

வ்யாக்யானம் - (கழறேல் நம்பீ) அது முன்னம் செய்தபடி செய்ய, நீர்தாம் முதன்மை கொண்டாடி அபிபவித்து வார்த்தை சொல்லாதே கொள்ளும் எங்களை. (நம்பீ) ப்ரபாவங் கொண்டு அபிமதம் சாதிக்கவொண்ணாது காணும்! "நெஞ்சில் வெறுப்புடையார் சொல்லுமது வார்த்தையன்று; உங்களையொழிய ஸாக்ஷியுண்டோ?" என்ன, (உன் கைதவம் மண்ணும் விண்ணும் நன்கறியும்) உன் க்ருத்ரிமம் எங்களளவன்று, ஸகலலோக ப்ரஸித்தங்காண். "வாயுந்திரையுக"ளில் வாஸநையாலே "ஜகத்தையெல்லாம் தம்மைப்போலே நினைத்திருக்கும்" என்றிருக்கிறார். ஸம்பந்தம் அவிசிஷ்டமானால் அங்ஙன் நினைத்திருக்க ஒரு தட்டில்லையிறே. அன்றிக்கே, சேஷியொருவனானால் சேஷ வஸ்துக்களெல்லாம் ஒருமிடறாயிருக்குமிறே; ஒருவனுக்குப் பல அடிமை உண்டானால் தங்களில் எல்லாரும் ஒத்திருப்பர்களிறே க்ருத ஸங்கேதிகளாய். மண்ணிலுள்ளாரும் விண்ணிலுள்ளாரும் அழகிதாக அறியும். விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற அறியும். "இவ்விடையாட்டம் இரண்டும் அறியாதாரையோ ஸாக்ஷியாகச் சொல்லுவது? "அறிவினால் குறைவில்லாத அகல்ஞாலமன்றோ இது!" என்றான்.

விளக்கம் – (கழல் ஏறேல் நம்பீ) - மத்யஸ்தம் மூலமாக விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளும்போது நாங்கள் இதனை முடித்துக் கொள்கிறோம். நீ உனது மேன்மையைக் கருத்தில் கொண்டவனாக மேன்மேலும் சொற்களைக் கூறாமல், நாங்கள் கூறுவதை ஏற்பாயாக. (நம்பீ) – உனது ப்ரபாவத்தைக் காண்பித்து உனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள இயலாது. இவர்கள் இவனிடம், "உன்னுடைய வஞ்சனை நிறைந்த செயல்களை விண்ணும் மண்ணும் நன்கு அறியும்" என்றனர். இதற்கு இவன், "நெஞ்சத்தில் வெறுப்பு உள்ளவர்கள் கூறும் சொற்கள் இவை; இவை சொற்களே அல்ல. நான் இவ்விதம் வஞ்சகன் என்பதற்கு, நீங்கள் அல்லாமல் வேறு சாட்சிகள் ஏதேனும் உள்ளதா?", என்றான். இதற்கு இவர்கள் கூறுவது; (உன் கைதவம் மண்ணும் விண்ணும் நன்கு அறியும்) - உன்னுடைய வஞ்சகம் என்பது எங்கள் அளவில் மட்டும் நிற்கவில்லை. இது அனைத்து லோகத்தில் உள்ளவர்களால் நன்கு அறியப்பட்ட ஒன்றே ஆகும்.

ஆனால் இவள் இவனை "வஞ்சகன்" என்று கூறினால், அனைவரும் அப்படியே ஏற்பார்களோ என்பதற்கு விடை அளிக்கிறார்; "வாயும் திரையுகளும்" என்ற திருவாய்மொழியின் வாசனை காரணமாக, "தன்னைப் போன்றே இந்த ஜகத்தும் எண்ணும்" என்பதாக எண்ணுகிறாள். ஆனால் அவ்விதம் அனைவரும் எண்ணுவார்களோ என்றால், அவனுடனான ஸம்பந்தம் அனைவருக்கும் பொதுவாக உள்ளபோது, அவ்விதம் அனைவரும் எண்ணுவதாகக் கூறுவதில் தவறு இல்லை. "ஆனால் நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டும் தன்னிடம் உள்ளதால், யாரேனும் நம்மை 'வஞ்சகன்' என்று கூறுவார்களோ" என்று இவன் கேட்பதாகக் கொண்டு, வேறு ஒரு கருத்தையும் அருளிச்செய்கிறார். இவன் இவர்களிடம், "எஜமானன் ஒருவன் என்று உள்ள போது, அவனுக்கு அடிமையாக உள்ள அனைத்தும் ஒரே சிந்தனை கொண்டதாக அல்லவோ இருக்கும்? ஒருவனுக்குப் பல அடிமைகள் உள்ளபோது, அவர்கள் அனைவரும் ஏதேனும் ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டால், ஒரே சிந்தனை அல்லவோ கொண்டிருப்பார்கள்? இந்த ந்யாயத்தை மண்ணில் உள்ளவர்களும், விண்ணில் உள்ளவர்களும் நன்றாக அறிவர்; அதாவது சிறப்பான ஞானம் கொண்டவர்களும், அவ்விதம் ஞானம் இல்லாதவர்களும் நன்கு அறிவர். இந்தச் செயல்களை நன்கு அறியாமல் உள்ளவர்களையா சாட்சியாக அழைக்க இயலும்? திருவாய்மொழி (4-8-6) - அறிவினால் குறைவில்லாத அகல்ஞாலம் - என்பதாக உள்ள உலகம் அல்லவோ இது? அதாவது, 'நமக்கு ஞானம் இல்லை' என்று வருத்தம் கொள்ளவும், அனுதாபம் செய்யவும் அறியாதபடி உள்ள உலகம் இதுவாகும்", என்றான்.

வ்யாக்யானம் - (விண்ணும் நன்கறியும்) "ஆனாலும், அவர்களிலே ஒருத்தரைச் சொல்லச் சொல்லுங்கோள் பொய்யென்று" என்றான்; ஆனால், உனக்குப் பக்ஷபதித்திருக்கு மவர்களிலே ஏற்றுகிறோம் கைமேலே; (திண் சக்கர நிழறு தொல்படையாய்) குற்றந் தன்னையே குணமாகக் கொள்ளுவாரைக் கேள்! உன் க்ருத்ரிமத்துக்குப் பெருநிலை நிற்பார்க்கன்றோ தெரிவது! உன் நினைவு அறிந்து கையிலே வந்திருப்பது, "பகலை யிரவாக்கவல்லையோ?" என்று கேட்டால் "ஓம்" என்று கொண்டு ஆதித்யனை மறைப்பது; இப்படியேயிறே அவனுடைய வர்த்தநம்.

விளக்கம் – (விண்ணும் நன்கு அறியும்) – “நான் பொய்யன் என்கிறீர்கள். இதனை விண்ணும் மண்ணும் அறியும் என்கிறீர்கள். ஆயினும் அவர்களில் ஒருவரையேனும், நான் பொய்யன் என்று கூறுமாறு உரைப்பீர்களாக”, என்றான். இதற்கு இவர்கள், “உன் மீது பாரபக்ஷமாக அன்பு வைத்திருக்கும் அவர்களிடம் உனது சக்கரத்தைக் கொண்டே இதனை நேரடியாகவே உணர்த்துக்கிறோம்”, என்று தொடர்கிறார்கள். (திண் சக்கர நிழறு தொல்படையாய்) - உனது குற்றத்தை உள்ளபடி அறிந்துள்ளபோதிலும், அதனைக் குற்றம் என்று கொள்ளாமல் குணமாகவே கொண்டு, உனது குற்றங்களை மறைப்பவர்களிடம் சென்று கேட்பாயாக. உனது குற்றங்களையும் வஞ்சனைகளையும் நன்கு அறிபவர்களுக்கும், அவற்றுக்குத் துணையாக நின்று உதவி செய்பவர்களுக்கும் அல்லவோ உனது குற்றத்தை எப்படி மறைப்பது என்று தெரியும்? அவ்விதம் அவர்கள் உதவி செய்வது எப்படி என்பதைக் கூறுகிறார்; உனது நினைவு அறிந்து திருக்கரத்தில் வந்து நிற்பது; அதாவது பீஷ்மரை அழிப்பது என்று தீர்மானித்தவுடன் திருக்கரத்தில் வந்து நின்ற தன்மை; “பகலை இரவாக்க இயலுமோ?”, என்று இவன் எண்ணியவுடன், “அப்படியே ஆகட்டும்” என்று சக்கரத்தாழ்வான் ஓடி வந்து சூரியனை மறைத்தல்; இப்படியாக அல்லவோ வஞ்சகத்திற்கு உதவும் சக்கரத்தின் செயல்கள் உள்ளன?

வ்யாக்யானம் - (திண் சக்கரம்) அப்பொய்யிலவனைப் பேதிக்கிலும் இவனைப் பேதிக்க வொண்ணாதாயிருக்கை. ஸ்வதந்த்ரனாகையாலே கார்யாநுகுணமாக ஏறிட்டுக்கொள்ளும் அவன்; இவனுக்கு அதில்லையிறே. (நிழறு தொல் படையாய்) நிழறுகையாவது நடத்துகை. அதாவது நிறங் கொடுக்கையாய், அஸத்ய பரதிஜ்ஞனாயிருக்கச்செய்தே ஸத்யப்ரதிஜ்ஞனானால் பிறக்கும் கார்யத்தைப் பிறப்பித்துக் கொடுக்கை. (தொல்படையாய்) இப்படிக்குப் பழையனாய்ப் போருகை. இவள் இப்படிச் சொன்னவாறே “ஸ்வபக்ஷத்திலே சிலர் இப்படி நமக்கு உண்டாவதே!” என்று, சொல்லலாவது காணாமல் கவிழ் தலையிட்டான்.

விளக்கம் – (திண் சக்கரம்) – அந்தப் பொய்களில் க்ருஷ்ணனைக் குறித்து மாறுபட எண்ணினாலும், சக்கரத்தாழ்வானை “அவ்விதம் இவன் பொய் கூறமாட்டான்” என்று மாறுபட எண்ண இயலாதபடி உள்ள தன்மை. ஏன் சக்கரத்தாழ்வானை மாறுபட எண்ண இயலாது என்பதை கூறுகிறார்; சுதந்திரமாக அவன் உள்ளதால்,

தனது கார்யத்திற்கு ஏற்றபடி சக்கரத்தாழ்வானைப் பயன்படுத்திக் கொள்வான்; ஆனால் சக்கரத்தாழ்வானுக்கு அத்தகைய சுதந்திரம் இன்றி, பகவானுக்கு மட்டுமே கட்டுப்பட்டவன் என்பதால், மாறுபட இயலாது. (நிழறு தொல் படையாய்) - நிழறுகை என்றால் உதவுதல் என்று பொருள். அல்லது வேறு ஒரு பொருளும் உள்ளது; அதாவது, பொய்யனாக உள்ள க்ருஷ்ணன், மெய்யனாக உள்ள நேரத்தில் தனக்கு உரைக்கும் செயல்களை முடித்தல். (தொல்படையாய்) - இப்படிப்பட்ட வஞ்சகமான செயல்களுக்கு எப்போதும் துணை நிற்கும் சக்கரத்தாழ்வான். இவ்விதம் இவன் தன்னைக் குறித்தும், சக்கரத்தாழ்வானைக் குறித்தும் உரைத்தவுடன் அவன், "நம்பக்கம் இது போன்று நமக்காக வாதம் செய்து நிற்கும் சிலர் இல்லாமல் போனார்களே!", என்று அடுத்து என்ன உரைப்பது என அறியாமல் தலையைக் கவிழ்த்து நின்றான்.

வ்யாக்யானம் - (உனக்கு ஒன்றுணர்த்துவன் நான்) வாராய்! நீ சொலவற்றிருக்கவேண்டா; உனக்கு நான் நல்லதொரு ஹிதஞ்சொல்ல வா என்றாள். இது செவிகொடுத்துக் கேட்டானாகில், இதுக்குச் சொல்லலாவதொரு மறுமாற்றமில்லை; தனக்கு மேல் வார்த்தை சொல்லுகைக்கு ஒரு போக்கடியுமில்லை. இதெல்லாங் கிடக்கச் செய்தே பேசாதே புகா, "இதொரு பேச்சின் இனிமை இருந்தபடியென்?" என்றான்.

விளக்கம் – (உனக்கு ஒன்று உணர்த்துவன் நான்) – இதனைக் கண்ட இவள், "வாராய்! நீ என்ன கூறுவது என்று சொற்கள் அற்று நிற்கவேண்டாம். உனக்கு ஏற்ற நன்மையை நாங்கள் கூறுகிறோம். இனியாவது வஞ்சகச் செயல்கள் செய்யாமல், அவர்களிடம் செல்வாயாக. அல்லது நான் வஞ்சகமான செயல்களைச் செய்தேன் என்று ஒப்புக் கொள்வாயாக", என்றாள். இவர்கள் கூறுவதை நன்கு கேட்டான் என்றால், இவனுக்கு மறுமொழி கூற இயலாது; காரணம், தனது சக்கரத்தால் சூரியனை மறைத்த காரணத்தால் "நான் வஞ்சகமான செயல்களைச் செய்யவில்லை" என்று மறுமொழி கூற இயலாது. தான் அஸத்யவாதி என்பதால், இவர்களுக்கு மேலே ஒரு பதில் உரை கூறவும் இயலாது. "நீ செய்த வஞ்சகம் மற்றும் பொய்கள் குறித்து நான் உணர்த்துகிறேன்" என்று அவள் கூறினால், "அவை என்ன?", என்று கேட்காமலும், பதில் கூறுதல் போன்றவற்றைச்

செய்யாமலும் என்பதாக ஏதும் பேசாமல் நின்று விட்டு, “உங்களுடைய பேச்சுக்களுடைய இனிமைதான் எத்தகையது!”, என்றான்.

வ்யாக்யானம் -- (மழறு தேன்மொழியார்கள்) பாவியேன், நீ யாருடைய பேச்சை யாருடைய பேச்சென்று ப்ரமிக்கிறாய்! மழறுதேன் - மழலைத்தேன். கலங்கின தேன் போலே இனிய பேச்சுக்களையுடையராயிருக்கை. இவன் ஸந்நிதி மாறாமையாலே கலக்கமும் மாறாதேயிருக்குமே. “அவையெல்லாம் இங்கேயிறே” என்னுமே அவன். (மொழியார்கள்) எத்தனை பேர் உனக்கு? (நின்னருள் சூடுவார்) ஆரேனும் பேச்சைக் கேட்டுத் தங்கள் பேச்சென்று ப்ரமிக்கும்படி பண்ணவல்லவர்கள். ஒருக்தியாலே “ஸ்திதோஸ்மி கத ஸந்தேஹ:” என்னும்படி வார்த்தை சொல்லவல்ல உன்னை ஒருக்தியாலே கலங்கப் பண்ண வல்லவர்கள். “அதுக்கென்?” என்றான்; “அவர்களெங்களைப் போலல்ல காண்; நீ ப்ரயோஜந நிரபேக்ஷமாக இங்கே நிற்கச் செய்தேயும், இத்தை அறிந்து வைத்தும் க்ஷண மாத்ர விச்லேஷம் பொறுக்க மாட்டாமையாலே அவர்கள் மநஸ்ஸு வாடுங்காண்! ஆச்ரயத்தை இழந்த தளிர் போலேகாண் அவர்கள் நெஞ்சு வாடும்படி. ‘கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒருநாள் தங்குமேல் என்னாவி தங்கும்’ என்றிருக்குமவர்களிறே அவர்கள்; அவ்வளவில் நீ உதவப் பெறாமையாலே போர நோவுபடுவர்கள்; அது கண்டால், நீ பொறுக்கவல்லையோ?” என்று சொல்லிப் பேசாதேயிருந்தாள்.

விளக்கம் - (மழறு தேன்மொழியார்கள்) - ஆகா! நீ யாருடைய பேச்சுக்களை, யாருடைய பேச்சுக்கள் என்று எண்ணி மயங்குகிறாய். இப்படியாக உன்னைத் தடுமாற்றி பிச்சு ஏறும்படியாகச் செய்தவர்கள் யார்? “மழறு தேன்“ என்றால் “மழலைத் தேன்”. “மழறு” என்பதற்கு “கலங்கின” என்பதாகப் பொருள் கொண்டு, அடுத்து ஒரு கருத்தும் கூறுகிறார். கலங்கிய தேன் போன்று இனிமையான சொற்கள் கொண்டவராக இருத்தல்; ஆனால் கலங்குவதற்கு என்ன கரணம்? இவன் அருகில் இருப்பது மாறாமல் உள்ளதால், கலக்கமும் மாறாமல் இருக்கிறது. “எனக்கு இவ்விதம் பிச்சேறுவது அனைத்திற்கும் காரணம், இங்கே அல்லவோ உள்ளது?”, என்கிறான். (மொழியார்கள்) - இது போன்று உன்னைப் பித்துப்பிடித்தவன் போன்று செய்யவல்லவர்கள் எத்தனை பேர் உள்ளனரோ? (நின்னருள் சூடுவார்) - யாராவது பேசுவது கேட்டாலும், தங்களுடைய பேச்சாகவே

நீ எண்ணி மயங்கி நிற்பது போன்று உன்னைச் செய்யவல்லவர்கள். கீதையில் (18-66) - “மா சுச:” என்னும் ஒரு சொல் மூலமே, கீதை (18-73) - ஸ்திதோஸ்மி கத ஸந்தேஹ: - இப்போது நான் சந்தேகம் ஏதும் இன்றி உறுதியுடன் உள்ளேன் - என்பதாக அர்ஜுனனை ஒரு சொல் கூறும்படியாக அவன் ஐயங்கள் அனைத்தையும் நீக்கி நிற்கும் உன்னையும் கூட, தங்களுடைய ஒரு சொல்லால் கலங்கும்படிச் செய்ய வல்லவர்கள். இதனைக் கேட்ட இவன், “அதனால் என்ன?”, என்றான். இதற்கு இவர்கள், “அவர்கள் எங்களைப் போன்று, நீண்ட நாட்கள் பிரிந்து, துன்பம் அடைந்து, உயிர் வாழவும் இயலாமல், முடிந்து போகவும் இயலாமல் தரித்து நிற்கும் எங்களைப் போன்றவர்கள் அல்லர். நீ பலனை எதிர்பாராமல் இங்கு நிற்பதை அவர்கள் அறிந்தவுடன், ஒரு நொடி கூட உனது பிரிவைப் பொறுக்க இயலாத அவர்கள் மனமானது வாடிவிடும் என்று அறிவாயாக. இவ்விதம் அவர்கள் வாடுவதற்குக் காரணம், நாச்சியார் திருமொழி (8-7) - கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பு அழியப் புகுந்து ஒரு நாள் தங்குமேல் என் ஆவி தங்கும் – என்பதாக அவர்கள் உள்ளதால் ஆகும். இப்படியாக அவர்கள் உள்ளபோது நீ சென்று உதவாமல் இருந்தால், அவர்கள் மிகுந்த துன்பம் அடைவார்கள். அதனைக் கண்டால் நீ பொறுத்துக் கொள்வாயா?”, என்று உரைத்து மௌனமாக நின்றாள்.

வ்யாக்யானம் - “உங்கள் பேச்சிலும் எனக்கு தாரகம் இவற்றின் பேச்சன்றோ!” என்று அவர்களை விடாப் பூவையையும், கிளியையும் கொண்டாடப் புக்கான்; சிலரை ஆதரிக்கையாவது, அவர்களுடைமையை ஆதரிக்கையிறே. அவற்றை ஆதரித்து வார்த்தை கொள்ளப் புக்கவாறே, “வாராய்! அவைதான் நீ ஆரினவென்றிருக்கிறாய்? அவை நீ நினைக்கிறவர்களதன்று காண்!” (எம் குழறு பூவையொடும் கிளியோடும் குழகேலே) அவை உனக்கு வார்த்தை சொல்லுகிறனவல்ல காண்! அவற்றுக்கு அது ஸ்வபாவங்காண்! (குழகேலே) நாங்கள் அந்யமாக வார்த்தை சொல்லச் செய்தேயும் கண்டாயே நீ அநந்ய கதித்வந் தோற்ற வார்த்தை சொல்லுகிறபடி; அப்படியே இவற்றின் பேச்சும் அந்யார்த்தங்காண்!

விளக்கம் - இதனை கேட்ட இவன், “எனக்கு உங்களுடைய பேச்சுக்களைக் காட்டிலும் உயிர் தாங்கும்படிச் செயலைச் செய்பவை இவற்றின் பேச்சு அல்லவோ?”, என்று கூறியவனாக, அவர்கள் எப்போதும் விடாமல் உள்ள பூவை

மற்றும் கிளி ஆகியவற்றைக் கொண்டாட முயன்றான். இவர்களை விடுத்து, பூவை மற்றும் கிளி ஆகியவற்றை ஏன் அழிக்கவேண்டும்? காரணம், ஒரு சிலரை கொண்டாடும்போது, அவர்களுக்குச் சொந்தமாக உள்ளவற்றையும் கொண்டாடவேண்டும் என்பதால் ஆகும். ஆக இப்படியாக இவன் அவற்றை ஆதரித்து, அவற்றின் பேச்சுக்களைக் கேட்க முனைந்தான். அப்போது இவள், “வாராய்! இவை யாருடைவை என்று நீ எண்ணுகிறாய்? இவை நீ எண்ணும் அந்தப் பெண்களுடையவை அல்ல”, என்றாள். (எம் குழறு பூவையொடும் கிளியோடும் குழகேலே) - அவை உன்னிடம் பேசவல்லவை அல்ல. அவற்றுக்கு இதுவே இயல்பாகும். நீ வேறு கதி இல்லாதவன் போன்று சில சொற்களைக் கூறினாய்; இதிலிருந்து, நாங்கள் உறவு அறும்படியாகச் சில சொற்கள் கூறியதை நீ உணர்ந்தாய் என்பது புலப்படுகிறது. இவையும் அது போன்று பேச வல்லவை ஆகும். ஆகவே இவற்றை ஆதரித்து அவற்றின் பேச்சுக்களை நீ கேட்க முயலவேண்டாம்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 117)

65. அக்ருத்ரிம த்வத் சரணாரவிந்த ப்ரேம ப்ரகர்ஷ அவதிம் ஆத்மவந்தம்
பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத மத் வ்ருத்தம் அசிந்தயித்வா

பொருள் – "என்னுடைய தாழ்ந்த செயல்களைச் சிந்தனையில் கொள்ளாமல், உனது திருவடித்தாமரைகளில் இயல்பாகவே உயர்ந்த அன்பைக் கொண்டவரும், அந்த அன்பின் எல்லையாக உள்ளவரும், ஜீவாத்ம ஸ்வரூபம் குறித்து நன்கு அறிந்தவரும், எனது பட்டனாரும் ஆகிய நாதமுனிகளைக் கருத்தில் கொண்டு என்னை மன்னிக்கவேண்டும்", என்கிறார்.

அவதாரிகை – " 'ராமோ த்விர்நாபி பாஷதே' என்கிற ஸங்கல்பத்தை விட்டீரேயாகிலும், பெரியமுதலியாரோடு வித்யையாலும், ஜன்மத்தாலும் உண்டான ஸம்பந்தத்தையே பார்த்தருளி, என்னுடைய நன்மை தீமைகளைப் பாராதே விஷயீகரிக்க வேணும்" என்ன; "அதுக்குக் கண்ணழிவு இல்லாமையாலே, அப்படிச் செய்கிறோம்" என்று ஈச்வரன் அனுமதி பண்ண, தாம் அனுமதி பெற்றாராய், ஸ்தோத்ரம் தலைக்கட்டுகிறார்.

விளக்கம் – ஆளவந்தார் ஸர்வேச்வரனிடம், "அயோத்யாகாண்டம் (18-30) – ராமோ த்விர்நாபி பாஷதே - இராமன் இரண்டுவிதமாகப் பேசமாட்டான் - என்பதாக உள்ள உனது ஸங்கல்பத்தை நீ கைட்விடாலும், நாதமுனிகளுடைய வித்யை மற்றும் பிறப்பு ஆகியவற்றால் உண்டான ஸம்பந்தத்தை நோக்கியாவது,

எனது நன்மை மற்றும் தீமைகளைக் குறித்து ஆராயாமல், என்னை ஏற்றுக் கொள்ளவேண்டும்", என்றார். ஸர்வேச்வரன், "அதற்கு எந்தக் குறையும் இல்லை என்பதால் அப்படியே செய்கிறோம்", என்று அனுமதித்தான். இதனை அறிந்தவராக, இந்த ஸ்தோத்ரத்தை நிறைவு செய்கிறார்.

வ்யாக்யானம் - (அக்ருத்ரிம) "க்ரியயா நிர்வ்ருத்த: க்ருத்ரிம:; தத்ரஹித: அக்ருத்ரிம:" ஸ்வாபாவிக இத்யர்த்த:. குலந்தானே யோகி குலமாகையாலே நைஸர்க்கிகமென்கை. மெய்யான ப்ரேமமென்னவுமாம். (த்வத்) ப்ராப்த சேஷியான உன்னுடைய. (சரணாரவிந்த) ஆச்ரிதருக்கு இழியும் துறையாய் போக்யமான திருவடிகளை. (ப்ரேம ப்ரகர்ஷ அவதிம்) ப்ரேமாதிசய ஸீமா பூமியானவர். நமக்கு இதர விஷயங்களில் ப்ரேமமெல்லாம் இவர்க்கு வகுத்த விஷயத்திலேயிறே இருப்பது. (ஆத்மவந்தம்) பகவச்சேஷத்வம் ஸ்வரூபமாகவே ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞானமுடையவரென்கை. "தநவந்தம்" என்னுமாபோலே.

விளக்கம் – (அக்ருத்ரிம) - "க்ரியயா நிர்வ்ருத்த: க்ருத்ரிம:; தத்ரஹித: அக்ருத்ரிம: - ஒரு செய்கை மூலம் உண்டாவது க்ருத்ரிமம் என்ற பெயர் பெறும்; எந்தச் செய்கையும் இன்றி இயல்பாகவே ஏற்படுவது அக்ருதிமம் ஆகும்" என்று பொருள். நாதமுனிகளுடைய குலமானது, தானாகவே யோகிகளுடைய குலமாக உள்ளதால், இயற்கையான அன்பு என்று கொள்ள வேண்டும். உண்மையான அன்பு என்றும் கொள்ளலாம். (த்வத்) - அடையப்படவேண்டிய எஜமானனாகிய உன்னுடைய. (சரணாரவிந்த) – அடியார்கள் வந்து மூழ்கியபடி உள்ள இடமாகவும், இனிமையாகவும் உள்ள திருவடிகளை. (ப்ரேம ப்ரகர்ஷ அவதிம்) - அன்பின் எல்லையாக உள்ள இவர். நமக்கு மற்ற விஷயங்களின் மீது அன்பு உள்ளது, இவருக்கு இயற்கையாகவே ஸம்பந்தம் உள்ள விஷயத்தின் மீது அன்பு உள்ளது. (ஆத்மவந்தம்) - பகவானுக்கு அடிமை என்ற நிலை, இவருடைய ஸ்வரூபமாகவே உள்ளதால், ஆத்மாவைக் குறித்த உண்மையான ஞானம் கொண்டவர்.

வ்யாக்யானம் - (பிதாமஹம் நாதமுநிம்) குடல் துடக்கை உடையராய், பகவத் ஜ்ஞாந நிதியாயுள்ளவரை. (விலோக்ய) கடாக்ஷித்து. (ப்ரஸீத) அபராதங்களைப் பொறுத்தருள வேணும். (மத் வ்ருத்தம் அசிந்தயித்வா) அஸத் கர்மத்தை விஸ்மரிக்கக் கடவராகவேணும் என்கை. "மத் வ்ருத்தம்" என்று ஸத் கர்மத்தை

நினைக்கிறது. வ்ருத்தவானென்றால் ஸத் கர்ம யுக்தனையிறே சொல்லுகிறது. ஸ்வகதமானவற்றை அனாதரித்து, பெரியமுதலியார் ஸம்பந்தம் எனக்குத் தஞ்சமாக வேணுமென்று ப்ரார்த்தித்து, ஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டியருளுகிறார்.

விளக்கம் - (பிதாமஹம் நாதமுநிம்) - பிறப்பு ஸம்பந்தம் உள்ளவராக, பகவத் ஞானம் என்ற நிதி நிறைந்தவராக. (விலோக்ய) - இப்படிப்பட்ட நாதமுனிகளை நோக்கிய பின்னராவது. (ப்ரஸீத) - எனது அபராதங்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் (மத் வ்ருத்தம் அசிந்தயித்வா) – எனது தீய கர்மங்களை நினைவில் கொள்ளாமல் இருக்கவேண்டும். "மத் வ்ருத்தம்" என்பதன் மூலம் "நல்ல கர்மத்தை நினைக்கவேண்டும்", என்கிறார். வ்ருத்தவான் என்பதன் மூலம், நல்ல கர்மம் செய்தவன் அல்லவோ கூறப்படுவான்? "என்னிடம் உள்ளவற்றைப் பொருட்படுத்தாமல், நாதமுனிகள் ஸம்பந்தம் எனக்குத் தஞ்சமாக உள்ளதை ஏற்றுக்கொள்ளவேண்டும்", என்று ப்ரார்த்தித்து, இந்த ஸ்தோத்ரத்தை நிறைவு செய்கிறார்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்தோத்ரரத்ன வ்யாக்யானம் ஸம்பூர்ணம்